**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

# திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 9129/SCIC/2023

திரு.M.ஐயப்பன் — மேல்முறையீட்டாளர்
கதவு எண்.7-63-A, அயந்தி
மாரிக்கோணம் சாலை
பொன்மனை அஞ்சல்
கன்னியாகுமரி - 629 161.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
மார்த்தாண்டம். கன்னியாகுமரி

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 03/02/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கடந்த 11/04/2022 அன்று பதிவு தபால் மூலமாக மனு மாவட்டப் பதிவாளர் அவர்களுக்கு அனுப்பி உள்ளேன். அம்மனு தங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் அட்டையும் கிடைக்கப் பெற்றது. எனது மனு தற்போது தங்கள் அலுவலகத்தில் எந்த பிரிவு அலுவலரிடம் எத்தனை நாட்களாக இருந்து வருகிறது என்ற தகவல் தரவும் ” என்பன போன்று 6 (ஆறு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் அவர்கள் மனுதாரருக்கு எண்.645/ஈ/ஆ/2023, நாள் 16/02/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 24/02/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதற்கு பொதுத் தகவல்

அலுவலர்/மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் அவர்கள் மனுதாரருக்கு எண்.645/ஈ/ஆ/2023, நாள் 03/03/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். மீண்டும், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 21/03/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதற்கு, மேல்முறையீட்டு அலுவலர்/ துணைப் பதிவுத்துறைத் தலைவர், திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.2409/அ1/2023, நாள் 20/04/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 16/05/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 9129/SCIC/2023 ஆக பதிவு செய்து. மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 31/07/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம் அவர்கள் மனுதாரருக்கு எண்.1601/ஈ/ஆ/2022, நாள் 17/10/2024 வாயிலாக ஏற்கெனவே 08/10/2024 தேதியிட்டு அனுப்பிய தகவலின் நகலை இணைத்து அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 11/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

5. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் செல்வி டி.பூவரசி, மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), மார்த்தாண்டம் பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி ஏற்கெனவே மனுதார ருக்கு 16/02/2023, 20/04/2023 மற்றும் 08/10/2024 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், அனுப்பப்பட்ட தகவல்கள் சரியானதாக இல்லை என்றார்.

**6. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 03/02/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள இனங்கள் 3 மற்றும் 4-க்கு, பொதுத் தகவல் அலுவலர் 16/02/2023 தேதியிட்டு அனுப்பியுள்ள தகவலிலேயே மனுதாரரை கட்டணம் செலுத்தி வில்லங்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள கோரப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர், தான் கட்டணம் செலுத்தவில்லை எனத் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலரால் இனங்கள் 3,4 ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தகவல் சரியானது என்றும் உரிய காலவரம்பிற்குள் தகவல் வழங்கப்பட்டிருக்கிறது என்று ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. அதன் பின்னர், மனுதாரர், இனங்கள் 1, 2-க்கு தனக்கு அளித்த தகவலில் வேர்கிளம்பி மற்றும் திருவட்டார் சார்பதிவாளர் அலுவலகங்களில் தகவல்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது, ஆனால் இதுநாள் வரை அந்த சார்பதிவாளர் அலுவலகங்களில் இருந்தும் தகவல்கள் வரப் பெறவில்லை எனத் தெரிவித்தார். இனம் 6-க்கு, மேல்முறையீட்டு அலுவலர் 20/04/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், நகல்**

இருந்தால் வழங்கவும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு பொதுத் தகவல் அலுவலர் 05/06/2023 தேதியிட்டு மனுதாரருக்கு, அவ்விவரம் தமது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்ற தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இனம் 6-க்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் ஆவணங்களின்படியான உரிய தகவலை மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதாக ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இனம் 5-க்கு வழங்கப்பட்ட தகவலை பரிசீலனை செய்கையில், அதனை ஆணையம் ஏற்கவில்லை. அதற்கு திருத்திய தகவலை பொதுத் தகவல் அலுவலர் மனுதார ருக்கு அளிக்க வேண்டும்.

எனவே, பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம் அவர்கள் இனம் 1, 2-க்கு மேற்குறிப்பிட்ட வேர்கிளம்பி, திருவட்டார் சார்பதிவகங்களிலிருந்து தகவல்களைப் பெற்று அதனையும், இனம்-5-க்கு திருத்திய தகவல், ஆகியவற்றை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர் நிறைவேற்றுகை அறிக்கை மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை 29/04/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேலும், மனுதாரருக்கு 16/02/2023 தேதியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தில் மேற்குறிப்பிட்ட வேர்கிளம்பி, திருவட்டார் சார்பதிவாளர்களிடம், மனுதாரர் கோரியுள்ள இனங்கள் 1, 2-க்கான தகவல்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு இருந்தாலும், ஆனால் இதுவரை எவ்வித தகவலும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. எனவே, இதற்காக, அப்போதைய (16/02/2023) பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம் திருமதி ஸ்வீட்லின் பிளாரன்ஸ் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை 29/04/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

## வழக்கு எண். SA 9129/SCIC/2023

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
மார்த்தாண்டம். கன்னியாகுமரி

2. திருமதி.ஸ்வீட்லின் பிளாரன்ஸ்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டப் பதிவாளர் (நிர்)
மார்த்தாண்டம் பதிவு மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.M.ஐயப்பன்
கதவு எண்.7-63-A, அயந்தி
மாரிக்கோணம் சாலை
பொன்மனை அஞ்சல்
கன்னியாகுமரி - 629 161.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035

RG/PC